ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்திப்ரபந்தம்

## தனியன்கள்

நேரிசை வெண்பா

தேன்பயிலும்தாரான் எதிராசன்சேவடிமேல்
தான்பரமபத்தி தலையெடுத்து–மாந்தர்க்கு
உணவாகஆர்த்தியுடன் ஓண்தமிழ்கள்செய்தான்
மணவாளமாமுனிவன் வந்து.

வம்பவிழ்தார்வண்மை மணவாளமாமுனிவன்
அம்புவியிற்கால்பொருந்தா வார்த்தியினால்–உம்பர்தொழும்
விண்ணுலகிற்செல்ல விரைந்தெதிராசன் பதங்கள்
நண்ணியுரைத்தார் நமக்கு.

வாழியெதிராசன் வாழியெதிராசன்
வாழியெதிராசனெனவாழ்த்துவார்–வழியென
வாழ்த்துவார்வாழியெனவாழ்த்துவார் தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர்தலை.

இராமாநுசாயநமவென்றுசிந்தித்து
இராமாநுசரோடுஇறைப்போழ்து–இராமாறு
சிந்திப்பார்த்தாளிணையில் சேர்ந்திருப்பார் தாளிணையை
வந்திப்பார்விண்ணோர்கள் வாழ்வு.

தந்தைநற்றாய்தாரம் தனயர்ப்பெருஞ்செல்வம்
எந்தனக்குனீயே எதிராசா!–இந்தநிலைக்கு
ஏலாதஇவ்வுடலைஇன்றே அறுத்தருள
பாராததென்னோபகர்?

இந்தவுடற்சிறைவிட்டுஎப்பொழுது யானேகி
அந்தமில்பேரின்பத்துளாகுவேன்–அந்தோ!
இரங்காய்எதிராச! என்னைஇனியுய்க்கை
பரங்காண்உனக்குஉணர்ந்துபார்.

தன்புதல்வன்கூடாமல் தான்புசிக்கும்போகத்தால்
இன்புறுமோ? தந்தை எதிராசா!–உன்பதல்வன்
அன்றோ வுரையாய் யான்ஆதலால் உன்போகம்
நன்றோவெனையொழிந்தநாள்?

வேம்புமுற்றக் கைப்புமிகுவதுபோல் வெவ்வினையேன்
தீம்புமுற்றும் தேகமுற்றிச்செல்லுங்கால்–ஆம்பரிசால்
ஏற்கவேசிந்தித்து எதிராசா? இவ்வுடலைத்
தீர்க்கவேயானவழிசெய்.

அன்னைகிடீரருந்தி முலையுண்குழவி

தன்னுடைய நோயைத்தவிராளோ?–என்னே!
எனக்காஎதிராசா! எல்லாம் நீசெய்தால்
உனக்கதுதாழ்வோஉரை?

தங்குழவிவான்கிணற்றைச் சார்ந்திருக்கக்கண்டிருந்தாள்
என்பதன்றோ அன்னைபழியேற்கின்றாள்–நங்குணரில்
என்னாலேயென்னாகுமேலும் எதிராசா!
உன்னாலேயாமுறவையோர்.

கூபதில்வீழும் குழவியுடன்குதித்து அவ்
வாபத்தை நீக்கும்அந்தவன்னைபோல்–பாபத்தால்
யான்பிறப்பேனேலும் இனியெந்தையெதிராசன்
தான்பிறக்குமென்னை யுய்ப்ப தா.

பூமகள்கோன்தென்னரங்கர் பூங்கழற்குப்பாதுகமாய்த்
தாம்மகிழும்செல்வச்சடகோபர்–தேமலர்த்தாட்கு
உய்ந்தினியபாதுகமாம்எந்தைஇராமாநுசனை
வாய்ந்தெனதுநெஞ்சமே! வாழ்.

உன்னையொழியஒருதெய்வம் மற்றறியா
மன்னுபுகழ்சேர் விடுகநம்பி–தன்னிலையை
என்தனக்குநீதந்து எதிராசா! எந்நாளும்
உன்தனக்கே யாட்கொள்உகந்து.

தேசந்திகழும் திருவாய்மொழிப்பிள்ளை
மாசில்திருமலையாழ்வார் என்னை–நேசத்தால்
எப்படியே எண்ணிநின்பால்சேர்த்தார்எதிராசா!
அப்படியே நீசெய்தருள்.

எதிராசன்வாழி எதிராசன்வாழி
எதிராசன்வாழி யென்றேத்திச்–சதிராக
வாழ்வார்கள் தாளினைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவார்
ஆழ்வார்கள் தங்களருள்.

அதிகாரமுண்டேல் அரங்கர்இரங்காரோ
அதிகாரமில்லாதர்க்கன்றோ–எதிராசா!
நீயிரங்கவேண்டுவது நீயும் அதிகாரிகளுக்
கேயிரங்கில் என்செய்வோம்யாம்.

எம்பெருமானார்திருவடிகளே சரணம்
என்பதுவேநாவுரைக்கும் இத்தாலென்?–அன்பவர்பால்
இப்போதளவும் யானென்றும்காண்கின்றிலேன்
எப்போதுண்டாவ தினி?

ஆகாததீதென்றறிந்தும் பிறர்க்குரைத்தும்
ஆகாததேசெய்வனாதலால்–மோகாந்தனென்று
நினைத்துஎன்னை இகழேல்எதிராசா!
என்றுஉன்னடிசேர்வன்யான்?

பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு நன்மையிலொன்

றில்லவெனக்கும்எதிராசா!–நல்லார்கள்
நண்ணும்திருநாட்டை நாந்தருவனென்றுநீ
தண்ணென்றிருக்கிறதென்றான்?

என்றுவிடிவதுஎனக்குஎந்தாய்எதிராசா!
ஒன்றுமறிகின்றிலேன் உரையாய்–குன்றாமல்
இப்படியே இந்தவுயிர்க்கென்றும் இருளேவிளைக்கும்
இப்பவமாம் நீண்டவிரைவு.

அல்லும்பகலும் யானாக்கைவழியுழன்று
செல்லுமதுஉன்தேசுக்குத் தீங்கன்றோ?–நல்லார்கள்
தந்தநயர்நீசர்க்காட்செய்யச் சகிப்பரோ?
எந்தையெதிராசா!விசை.

எண்சீராசிரிய விருத்தம்
போம்வழியைத்தருமென்னு மின்பமெல்லாம்
புசிந்துவழிபோய் அமுதவிரசையாற்றில்
நாம்மூழ்கிமலமற்றுத் தெளிவிசும்பை
நண்ணிநலந்திகழ்மேனி தன்னைப்பெற்றுத்
தாம்அமரர்வந்தெதிர் கொண்டலங்கரித்துச்
சற்கரிப்பமாமணி மண்டபத்துச்சென்று
மாமலராள்கோன்மடியில் வைத்துகக்கும
வாழ்வுநமக்கெதிராசனருளும் வாழ்வே.

கட்டளைக்கலித்துறை
திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
தருமதிகொண்டவர் தம்மைஉத்தாரகராகவெண்ணி
இருமனமெ அவர்க்கா யெதிராசர்எமைக்கடுக
பரமபதந்தன்னிலேற்றுவர் என்னபயம் நமக்கே?
தீதற்றஞானத்திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
ஏதத்தைமாற்றும்எதிராசர்தம்அபிமானமெனும்
போதத்தையேறிப்பவமாம் புணரிதனைக்கடந்து
கோதற்றமாதவன்பாதக்கரையைக் குறுகுவனே.

எண்சீராசிரிய விருத்தம்
அடியார்கள்குழாங்க ளழகோலக்கமிருக்க
ஆநந்தமயமான மாமணிமண்டபத்துப்
படியாதுமில் படுக்கையிருக்கு மநந்தன்
பணாமணிகள்தம்மினொளிமண்டலத்தினிடையில்
வடிவாரும்மாமலராள் வலவருகும்மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும்இருக்க
நடுவாகவீற்றிருக்கும் நாரணனைக்கடுக
நான்அனுபவிக்கும்வகை நல்குஎன்எதிராசா!

இந்தவுடல்விட்டுஇரவி மண்டலத்தூடேகி
இவ்வண்டங்கழித் திடையிலாவரணமேழ்போய்
அந்தமில்பாழ்கடந்து அழகார்விரசைதனிற்குளித்து அங்கு
அமானவனாலொளி கொண்டசோதியும்பெற்று அமரர்
வந்தெதிர்கொண்டலங்கரித்து வாழ்த்திவழிநடத்த
வைக்குந்தம்புக்கு மணிமண்டபத்துச்சென்று

நம்திருமாலடியார்கள்குழாங் களுடங்கூடும்
நாளெனக்குக்குறுகும்வகை நல்குஎன்எதிராசா!

என்றுநிரேதுகமாக வென்னையபிமானித்து
யானுமறிந்துஉனக்கேயாயிருக்கும் வகைசெய்தாய்
அன்றுமுதலின்றளவும் அநவரதம்பிழையே
அடுத்தடுத்துச்செய்வது அநுதவிப்பதுஇனிச்செய்யென்
என்றுன்னைவந்திரப்பதாம் என்கொடுமைகண்டும்
இகழாதேயிரவுபகலடிமை கொண்டுபோந்தாய்
இன்றுதிருநாடும்எனக்கருள எண்ணுகின்றாய்
இனிக்கடுகச்செய்தருளவேண்டும் எதிராசா !

தென்னரங்கர்தமக்காமோ? தேவியர்கட்காமோ?
சேனையர்கோன் முதலான சூரியர்கட்காமோ?
மன்னியசீர்மாறன் அருள்மாரிதனக்காமோ?
மற்றுமுள்ளதேசிகர்கள் தங்களுக்குமாமோ?
ஏன்னுடையபிழைபொறுக்க யாவருக்கு முடியும் ?
எதிராசா! உனக்கன்றி யானொருவர்க்காகேன்
உன்னருளால்எனக்குருசிதன்னையும் உண்டாக்கி
ஒளிவிசும்பில்அடியேனை யொருப்படுத்துவிரைந்தே.

இவ்வுலகில்இனியொன்று மெண்ணாதேநெஞ்சே!
இரவுபகலெதிராச ரெமக்கினிமேலருளும்
அவ்வுலகையலர்மகள்கோனங்கிருக்குமிருப்பை
அடியார்கள் குழாங்கள்தமை அவர்களநுபவத்தை
இவ்வுயிருமதுக்கிட்டுப் பிறந்திழந்துகிடந்த
தென்னுமத்தை என்றுமதுக்கிடைச்சுவாரய்க்கிடக்கும்
வெவ்வினையால்வந்தவுடல் விடும்பொழுதைவிட்டால்
விளையுமின்பந்தன்னை முற்றும்விடாமலிருந்தெண்ணே.

பண்டுபலவாரியரும் பாருலகோருய்யப்
பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மை
கண்டதெல்லா மெழுதியவைகற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன்கற்பித்துங் காலத்தைக்கழித்தேன்
புண்டரீகை கேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போகநினைவொன்றுமின்றிப் பொருந்தியிங்கேயிருந்தேன்
எண்டிசையுமேத்துமெதிராசனருளால்
எழில்விசும்பையன்றிஇப்போதென்மனமெண்ணாதே.

பதினாங்கு சீராசிரிய விருத்தம்

சாறுவாகமதம்நீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக்கடலைக்வற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட
மாறுசெய்திடுகணாதவாதியர்கள் வாய்தகர்த்தறமிகுத்துமேல்
வந்தபாசுபதர்ச்சிந்தி யோடும்வகை வாதுசெய்த எதிராசனார்
கூறுமாகுருமதத்தொடோங்கிய குமாரிலன்மதமவற்றின்மேல்
கொடியதர்க்கசரம்விட்டபின் குறுகியமாயவாதியரைவென்றிட
மீறிவாதில்வருபாற்கரன்மதவிலக்கடிக் கொடியெறிந்துபோய்
மிக்கயாதவமதத்தைமாய்த்த பெருவீரர் நாளும்மிகவாழியே.

எண்சீராசிரிய விருத்தம்

சீராருமெதிராசர் திருவடிகள்வாழி
திருவரையிற்சாத்திய செந்துவராடைவாழி
ஏராரும்செய்யவடிவு எப்பொழுதும்வாழி
இலங்கியமுந்நூல்வாழி இணைத்தோள்கள்வாழி
சோராததுய்ய செய்யமுகசோதிவாழி
தூமுறுவல்வாழி திணைமலர்க்கண்கள்வாழி
ஈராறுதிருநாமமணிந்த எழில்வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரைவாழியே

அறுசமயச்செடியதனை யடியறுத்தான்வாழியே
அடர்ந்துவரும்குதிட்டிகளை யறத்துறந்தான் வாழியே
செறுகலியைச்சிறிதுமறத் தீர்த்துவிட்டான்வாழியே
தென்னரங்கர்ச்செல்வமுற்றும் திருத்திவைத்தான் வாழியே
மறையதனில்பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரைசெய்ததமிழ் மறைவளர்த்தோன்வாழியே
அறம்மிகுநற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சங்கரபாற்கரயாதவபாட்ட ப்ரபாகரர் தங்கள்மதம்
சாய்வுறவாதியர்மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வேங்கலியிங்கினிவீறுநமக்கிலை யென்றுமிகத்தளர்நாள்
மேதினிநஞ்சுமையாறுமெனத் துயர்விட்டுவிளங்கியநாள்
மங்கையராளிபராங்குசமுன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னியதென்னரங்காபுரிமாமலை மற்றுமுவந்திடுநாள்
செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிறந்தபெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரைநாளே.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

இன்னம்எத்தனைகாலம்இந்தவுடம்புடன் யானிருப்பேன்?
இன்னபொழுதுஉடம்புவிடும் இன்னபடியதுதான்
இன்னவிடத்தேயதுவும் என்னுமிவையெல்லாம்
எதிராசா! நீயறிதி யானிவையொன்றறியேன்
என்னைஇனிஇவ்வுடம்பை விடுவித்துஉன்னருளால்
ஏராரும்வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல்
பின்னைவிரையாமல் மறந்திருக்கிறதென்? பேசாய்
பேதைமைதீர்த்துஎன்னை யடிமைகொண்ட பெருமானே!

முன்னைவினைபின்னைவினை யாரத்தமென்னும்
மூன்றுவகையான வினைத்தொகையனைத்தும்யானே
என்னையடைந்தோர்தமக்குக் கழிப்பனெனுமரங்கர்
எதிராசா! நீயிட்ட வழக்கன்றோ? சொல்லாய்
உன்னையல்லதறியாதயான் இந்தவுடம்போடு
உழன்றுவினைப்பயன் பசிக்கவேண்டுவதொன்றுண்டோ?
என்னுடையஇருவினையை இறைப்பொழுதில்மாற்றி
ஏராரும்வைகுந்தத் தேற்றிவிட்டாய்நீயே.

அருளாலேஅடியேனை அபிமானித்தருளி
அநவரதம்அடிமைகொள்ள நினைத்துநீயிருக்க
மருளாலேபுலன்போக வாஞ்சைசெய்யும்என்தன்

வல்வினையைமாற்றி உன்பால்மனம் வைக்கப்பண்ணாய்
தெருளாரும்கூரத்தாழ்வானும் அவர்ச்செல்வத்
திருமகனார்தாமும்அருளிச்செய்த தீமைத்
திரளானவத்தனையும் சேரவுள்ளவென்னைத்
திருத்தியுய்யக்கொள்ளும்வகை தேரும்எதிராசா!

நேரிசை வெண்பா

வாசனையிலூற்றமோ மாளாதவல்வினையோ?
ஏதென்றிறியேன்எதிராசா!–தீதாகும்
ஐம்புலனிலாசைஅடியேன்மனந்தன்னை
வன்புடனேதானடரும் வந்து.

இன்றளவுமில்லா அதிகாரம்–மேலும்எனக்கு
என்றுளதாம்சொல்லாயெதிராசா!–குன்றா
வினைததொடரைவெட்டிவிட்டு–மேலைவைகுந்தத்து
எனைக்கடுகவேற்றாததென்?

அஞ்சிலறியாதார்ஐம்பதிலும் தாமறியார்
என்சொலெனக்கோ எதிராசா?–நெஞ்சம்
உனதாளொழிந்தவற்றையே யுகக்க இன்றும்
அநுதாபமற்றிருக்கையால்.

வேம்புகறியாகவிரும்பினார் கைத்ததென்று
தாம்புகடாதேபுசிக்கும்தன்மைபோல்–தீம்பனிவ
னென்றுநினைத்துஎன்னையிகழார்எதிராசர்
அன்றறிந்தங்கீகரிக்கையால்.

அவத்தேபொழுதைஅடியேன்கழித்துப்
பவத்தேயிருக்குமதுபண்போ?–திவத்தேயான்
சேரும்வகையருளாய் சீராரெதிராசா!
போருமினியிவ்வுடம்பைப்போக்கு.

எனைப்போல்பிழைசெய்வார் இவ்வுலகிலுண்டோ?
உனைப்போல்பொறுக்கவல்லார் உண்டோ?–அனைத்துலகும்
வாழப்பிறந்தஎதிராசமாமுனிவா!
ஏழைக்கிரங்காயினி.

ஐம்புலங்கள்மேலிட்டரும்பொழுதுஅடியேன்
உன்பதங்கள்தம்மை நினைத்தோலமிட்டால்–பின்பவைதாம்
என்னையடராமல் இரங்காய்எதிராசா!
உன்னையல்லால் எனக்குண்டோ?

இந்தவிலகிற்பொருந்தாமைஏதுமில்லை
அந்தவுலகிற்போக ஆசையில்லை–இந்தநமக்கு
எப்படியோதான் தருவர்எந்தையெதிராசா!
ஒப்பில்திருநாடுகந்து?

மாகாந்தநாரணனார் வைகுந்தவகையறிந்தோர்க்கு
ஏகாந்தமில்லை இருளில்லை–மோகாந்தர்
இவ்விடமேகாந்த மிருளென்று பயமற்றிருந்து

செய்வார்கள்தாம் பாவத்திறம்.

நாராயணந்திருமால் நாரம்நாமென்னுமுறை
ஆராயில்நெஞ்சே! அநாதியன்றோ?– சீராரும்
ஆசாரியனாலேயன்றோ? நாமுய்ந்ததென்று
கூசாமல் எப்பொழுதும்கூறு.

திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோந்தம்மைக்
குருவாகிவந் துய்யக்கொண்டு–பொருவில்
மதிதானளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே!
எதிராசர்க் காளானோம்யாம்.

கட்டளைக் கலித்துரை

இராமானுசாயநமவென்று இரவும்பகலும்சிந்தித்து
இராமானுசர்களிருப்பிடந்தன்னி லிறைப்பொழுதும்
இராமானுசவர்க்கெல்லவடிமையுஞ் செய்யவெண்ணி
இராமானுசர்தம்மை மாநுசராவென்கொலெண்ணுவதே!
எண்ணாதென்னெஞ்சம்இசையாதென்நா இறைஞ்சாதுசென்னி
கண்ணானவையொன்றும்காணலுறா கலியாநலிய
வொண்ணாதவண்ணம் உலகளித்தோனெதிராசனடி
நண்ணாதவரை அரங்கேசர்செய்தநலம்நமக்கே.

நந்தநரகத்தழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்!
எந்தாதையான எதிராசனைநண்ணும் என்றும்அவ
னந்தாதிதன்னைசந்தியும் அவன்தொண்டருடன்
சிந்தாகுலம்கெடச்சேர்ந்திரும் முத்திபின்சித்திக்குமே.

அவத்தேயருமந்தகாலத்தைப் போக்கி அறிவின்மையால்இப்
பவத்தே உழல்கின்ற பாவியர்காள்பல காலம்நின்று
தவத்தேமுயல்பவர்தங்கட்கு மெய்தவொண்ணாத வந்தத்
திவத்தேயுமைவைக்கும் சிந்தியும்நீர்எதிராசனென்றே.

என்றுளனீசனுயிருமன்றேயுன் டிக்காலமெல்லாம்
இன்றளவாகப் பழுதே கழிந்து இருவினையால்
இன்றிழவின்யிருக்குமென்னெஞ்சம் இரவுபகல்
நின்றுதபிக்கும் எதிராசா! நீயருள் செய்தபின்னே.

நேரிசை வெண்பா

கனககிரிமேல் கரியமுகில்போல்
வினதைசிறுவன் மேற்கொண்டு–தனுவிடும்போது
ஏராரரங்கரெதிராசர்க்காக என்பால்
வாராமுன்னிற்பர் மகிழ்ந்து.

எண்சீராசிரிய விருத்தம்

இதத்தாலேதென்னரங்கர் செய்கின்றதென்றறிந்தே
யிருந்தாலும் தற்காலவேதனையின் கனத்தால்
பதைத்தாலோ என்னுமிந்தப்பாவவுடம்புடனே
பலநோவுமநுபவித்திப்பவத்திருக்கப்போமோ?
மதத்தாலே வில்வினையின் வழியுழன்று திரிந்த
வில்வினையேன் தன்னை யுனக்காளாக்கிக்கொண்ட

இதத்தாயும்தந்தையுமா மெதிராசா! என்னை
இனிக்கடுகவிப்பவத்தினின்று மெடுத்தருளே.

கட்டளைக்கலிப்பா

இன்ன மெத்தனை நாளிவ் வுடம்புடன்
இருந்து நோவுப டக்கட வேனையோ!
என்னை யிதினின் றும்விடு வித்துநீர்
என்றுதான்திரு நாட்டினு ளேற்றுவீர்?
அன்னை யுமத்தனுமல்லாத சுற்றமும்
ஆகி யென்னய ளித்தருள் நாதனே!
என்னிதத்தை யிராப்பக லின்றியே
ஏக மெண்ணுமெ திராச வள்ளலே!

எண்சீர்க்கடிநெடிலாசிரிய விருத்தம்

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்பெற்றோம்
திருவரங்கம்திருப்பதியே யிருப்பாகப்பெற்றோம்
மன்னியசீர்மாறன்கலை யுணவாகப்பெற்றோம்
மதுரகவிசொற்படியே நிலையாகப்பெற்றோம்
முன்னவராம்நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம்
முழுதும்நமக்கவை பொழுதுபோக்கப்பெற்றோம்
பின்னையொன்றுதனில் நெஞ்சுபேராமல் பெற்றோம்
பிறர்மினுக்கம்பொறாமையில்லாப்பெருமையும் பெற்றோமே.

நேரிசை வெண்பா

உன்தனபிமானமேயுத்தாரகமென்று
சிந்தைதெளிந்திருக்கச்செய்தநீ அந்தோ
எதிராசா! நோய்களா லென்னைநலக்காமல்
சதிராக நின்திருத்தாள் தா.

தேசிகர்க்கள்போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை
வாசமலர்த்தாளடைந்த வத்துவென்னும் நேசத்தால்
என்பிழைகள்காணா வெதிராசரே! அடியேன்
புன்பகர்வைக்கேளும் பொறுத்து.

எந்தைதிருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால்
உன்தனுறவையுணர்த்தியபின் இந்தவுயிர்க்
கெல்லாவுறவும் நீயென்றே யெதிராசா!
நில்லாத துண்டோ வென்னெஞ்சு?

எந்தைதிருவரங்க ரேரார்கருடன்மேல்
வந்துமுகங்காட்டி வழிநடத்தச் சிந்தைசெய்திப்
பொல்லவுடம்பதனைப் போக்குவதென்னாள்கொலோ?
சொல்லாயெதிராசா! சூழ்ந்து

இந்தவரங்கத்தினிதிருநீ யென்றரங்கர்
எந்தையெதிராசர்க் கீந்தவரம் சிந்தைசெய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே! நற்றாதைசொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறைதான்.

ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்
ஆர்த்திப்ரபந்தம் ஸம்பூர்ணம்.